1967 ஜூன் 28]

**102 வினு.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதிப்பிற்குரிய பொது சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகர் குடி தண்ணீர் திட்டத்திற்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டத்திற்கென மதுரை நகரவை 2 கோடி ரூபாய் கடன் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திற்கு அடுத்தபடியாக பெரிய நகரமாக, ஐந்து லட்சம் ஜனத்தொகையை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் மதுரை மாநகரத்தில் குடி தண்ணீர்த் தேவை எவ்வளவு அதிகம் என்பதை அறிந்திருக்கக் கூடிய இந்த அமைச்சரவை, இதுவரையில் இல்லாவிட்டாலும், இனிமேலாவது இது விஷயத்தில் துரிதமான கவனம் செலுத்துமா ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : So far a sum of Rs. 29,30,698 has been sanctioned as loan to the municipality for the execution of the scheme.

இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இப்பொழுது மதுரை நகரத்திற்கு எந்த இடத்திலிருந்து தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது ? வைகையிலிருந்து இன்னும் தண்ணீர் வரவில்லை, அங்கிருந்து தண்ணீர் வருவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, இப்பொழுது மதுரை நகரத்திற்கு எங்கிருந்து, எவ்வளவு தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவை மிகப் பெரிய தொழில் நகரமாக வளர்ந்திருக்கிற காரணத்தாலும், கோவையை ஒட்டிய சிங்காநல்லூர் இப்பொழுது நகரசபையாக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும், சிறுவாணியிலிருந்து வரும் தண்ணீரை அங்கே விஸ்தரிப்பதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி மதுரை நகரைப் பற்றியது. ஆகவே, இந்த விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர்த் திட்டம், வியாதியைப் பரவாமல் தடுப்பதற்காகவும், வியாதியைக் கட்டுப்படுத்துவதற்காகவும் கொண்டுவரப்பட்டது. ஆனால், அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில், 1964ம் ஆண்டிலேயே அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். அப்படியானால், தொத்து வியாதிகளெல்லாம் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டனவா ? இனிமேல் அவை வரவே வராதா ?

(பதில் இல்லை)

திரு ஜி. நடராஜன் : தலைவர் அவர்களே, காட்பாடிக்குக் குடி தண்ணீர்த் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கோரிக்கைகள் இருந்தும், அது நடைமுறைக்கு வரவில்லை. அதை இந்த ஆண்டாவது எடுத்துக்கொள்ளும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளிவைக்கப்பட்ட வினா எண் 83 இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகிறது.

போலீஸ் வழக்குகள்.

* 83 வினா.—**திரு. என். வரதராஜன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

போலீஸ் இலாகாவிலுள்ள சிப்பந்திகள் ஒரு மாதத்தில் அல்லது ஆறு மாதங்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை அளவுக்கு வழக்குகள் பதிவு செய்ய வேண்டும் என்ற விதி அமுலில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இல்லை.

திரு. கே. விநாயகம் : நேரடியாக அப்படிப்பட்ட ஒரு உத்தரவு எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் கொடுக்கப்படவில்லை என்றாலும், இன்று நடக்கிற பழக்கப்படி, இத்தனை கேஸ்கள் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலிருந்தும் வரவேண்டும் என்ற நியதி இருக்கிறதா ? இதற்கென ஸ்டாடிஸ்டிக்ஸ் தயாரித்து, சென்ற ஆண்டில் இத்தனை கேஸ்கள் வந்தன இந்த ஆண்டு இத்தனை வரவேண்டும் என்ற நியதி ஏதாவது இருக்கிறதா ? அதைக்குறித்து அங்கே இருப்பவர்கள் எப்படியாவது கேஸ்களை உண்டாக்கி, தமக்குக் கெட்ட பெயர் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அங்கேயிருக்கும் உத்தியோகஸ்தர்களும் அதற்குத் தகுந்தமாதிரி நடக்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுவது, உத்தியோகத்திலே உள்ளவர்களுடைய மனப்பான்மையைப் பற்றி, எனக்கு அந்த மனப்பான்மையைப்பற்றித் தெரியாது. ஆனால், காவல் நிலையங்களில், குற்றங்கள் என்ன என்ன ஏற்பட்டன, என்ன என்ன கண்டுபிடிக்கப்பட்டன என்கிற குறிப்புகள் நிச்சயம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மாநிலத்தில் குற்றங்கள் கூடுகின்றனவா குறைகின்றனவா என்ற கணக்கு சர்க்காருக்குத் தெரியும், அதன் மூலமாகப் பொது மக்களுக்கும் தெரிய முடியும். இத்தனை வழக்குகளைக் கட்டாயமாகப் போட்டே தீரவேண்டும் என்று சர்க்கார் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ உத்தரவு பிறப்பித்தது இல்லை.

திரு. க. ர. நல்லசிவம் : தலைவர் அவர்களே, இப்படியொரு பழக்கம் நிச்சயமாக இருந்து வருகிறது, போலீஸ் அதிகாரிகள் மத்தியிலே. இந்தப் பழக்கத்தை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டும் என்று அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? இல்லையென்றால், இனியாவது தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அப்படியொரு முறை இல்லை என்று நான் மறுத்தேன். அப்படியொரு பழக்கம் இருப்பதாக உறுப்பினர் அவர்கள் நிரூபிப்பார்களானால், பல கெட்ட பழக்கங்களை ஒழிக்கும் இந்த அரசு, அந்தக் கெட்ட பழக்கத்தையும் ஒழிக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சந்தேகத்தின் பேரில் கைது செய்கின்ற கேஸ்களும் இதில் உட்பட்டிருக்கின்றனவா, இல்லையா என்று முதலமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?